

ஆசிரியர் மடல்

# இயேசுவே மெய்யான ஒளி

அன்பான வாசகர்களுக்கு , இறை மக்களுக்கு,

இரட்சகரும் மீட்பரும் வரப்போகிற இராஜாதி இராஜாவுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

ஆகஸ்ட் என்றாலே தேசமும் தேசத்தின் சுதந்தரமும்தான் நம் கண்முன் நிற்கிறது.பெற்ற சுதந்தரத்தைக் காட்டிலும் (சு)தந்திரம்தான் நம் இந்திய தேசத்திலே தலைவிரித்து ஆடுகிறது.ஜனங்களுடைய தத்தளிப்புதான் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.தங்களுடைய வாழ்வாதாரத்தை தக்க வைத்துக்கொள்ள தக்காளி முதல் போராட வேண்டியதாயுள்ளது. முதல்மையான காரணம்,தேசத்திலே விக்கிரங்களின் ஆளுகை,அதனால் எழும்பும் தேவனுடைய கோபாக்கினை. இரண்டாவதாக,தேசத்திற்காக திறப்பின் வாசலில் நிற்கும் சபைகளின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணி விடலாம்.பூமிக்குரிய ஆசீர்வாதங்களையே முதன்மைப்படுத்தும் ஊழியங்களே இன்றைய நாட்களில் அதிகம்.1தீமோ இரண்டாம் அதிகாரம் 1,2 வசனங்களின் தாக்கம் மிகக் குறைவு.

**எழும்பு எழும்பு சீயோனே, உன் வல்லமையை தரித்துக்கொள்.** யூத ராஜ சிங்கத்தின் கர்ஜனை தேசத்தில் ஒலிக்கட்டும் . நிச்சயமாக தேசம் சமாதானத்தைக் காணும் . 2024 பாராளுமன்ற தேர்தல் தேசத்திற்கு நல் விசேஷத்தை கொண்டு வரட்டும்,கொண்டு வரும்.





**திருவண்ணாமலை** மாவட்டம் (கோனையூர்) கிளை சபை புதுப்பிக்கப்பட்டு வருகிறது *(Renovation)*.கடந்த நாளில் 29.7.23 அன்று சென்று வந்தோம். தேவைகள் அதிகம். ஜெபியுங்கள். *Aspestos Sheet* வாங்க மட்டும் 17,000/= (பதினேழாயிரம்) தேவைப்படுகிறது. ஏதாவது ஒரு குடும்பம் பொறுப்பெடுக்கலாமே !

**நெகேமியா இரண்டாம் கட்டப் பணி, சில நாட்களில் ஆரம்பிக்கப்படவேண்டும். ஜெபியுங்கள். உதவிக்கரங்களை நீட்டுங்கள். ஒரு குடும்பத்திற்கு 10,000/= (பத்தாயிரம்) என்று நியமித்திருக்கிறோம். கொடுத்து வருகிறார்கள். அநேக கரங்கள் ஒன்று சேர்ந்தால் இந்த ஆண்டிலேயே இதை முடித்துவிடலாம். ஒருவருக்கொருவர் ஊக்கமாய் ஜெபிப்போம் .**

**கிறிஸ்துவின் மகிமையான இறைப் பணியில்**
**பாஸ்டர் S. போஸ்கோ .**

**நீங்கள் அனுப்பும் கட்டிடப் பணி காணிக்கைகளுக்கு 80 G வரி விலக்கு உண்டு.**

**& 9283443230 (True Light Ministries)**
**Bank Transfer :**
**S.Bosco, State Bank Of India (SBI) A / C. No : 20003657678. Avadi .**
**Our Website : www.truelightministry.org**
***17, O.P. Raman Street, Gandhi Nagar, Avadi, Chennai - 600 054 .***

# தேவனுடைய ஆலயம்



# சிறப்பாய் கட்டுவோம் வாருங்கள்

**“நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாக கூட்டி கட்டப்பட்டு வருகிறீர்கள்”** (எபே 2 : 22).கட்டுவோம் என்ற வார்த்தை காலகாலமாய் காதுகளுக்குள் வந்து விழுந்து கொண்டிருக்கிற ஒரு நல்ல வார்த்தைதான். இனிமையான வார்த்தைதான். எளிமையான வார்த்தை மட்டுமல்ல, ஒரு வலிமையான வார்த்தையும்கூட. கிறிஸ்தவர்களுக்கு தேவையான செழுமையான வார்த்தை. அதுவே இன்றைய காலக்கட்டத்திற்கு கொழுமையான வார்த்தை. இந்த கட்டுவோம் என்ற வார்த்தைக்கு முன் எழுந்து என்ற வாக்கை ஏராளமாய் கேட்டு விட்டோம். அதன்படி அநேகர் எழுந்து பார்த்தார்கள்.எழுந்து நின்று பார்த்தார்கள். எழுந்து செயல்பட்டும் பார்த்தார்கள். அப்போஸ்தலர் 2–ம் அதிகாரம் மேல் வீட்டறை முதல் *Synod* வரை செயல்படுத்திக் கொண்டேயிக்கிறார்கள்.நல்லது.

இந்த செய்தியிலே அந்த **எழுந்து** என்ற வார்த்தையை ஒருபக்கமாய் வைத்து விட்டு, அந்த இடத்திலே ‘**சிறப்பாய்**’ என்ற வார்த்தையை போட்டு கொஞ்ச நேரம் தியானிக்கலாமே !

**பின்பு நான் அவர்களை நோக்கி : எருசலேம் பாழாயிருக்கிறதையும்,அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும், நாம் இருக்கிற சிறுமையையும் பார்க்கிறீர்களே; நாம் நிந்தைக்குள்ளாயிராதபடிக்கு, எருசலேமின் அலங்கத்தை கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, என் தேவனுடைய கரம் என் மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன்; அப்பொழுது அவர்கள் ; எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்கு தங்கள் கைகளை திடப்படுத்தினார்கள்.** (நெகேமியா 2 : 17,18).

**இந்த கட்டுவோம் என்ற வார்த்தைக்கு முன் எழுந்து என்ற வாக்கை ஏராளமாய் கேட்டு விட்டோம். அதன்படி அநேகர் எழுந்து பார்த்தார்கள். எழுந்து நின்று பார்த்தார்கள். எழுந்து செயல்பட் டும் பார்த்தார்கள். அப்போஸ்தலர் 2–ம் அதிகாரம் மேல் வீட்டறை முதல் *Synod* வரை செயல்படுத்திக் கொண்டேயிருக் கிறார்கள். நல்லது.**

## ஆலயத்தின் அமைப்பு

நேர்மை,உறுதி,பக்தி பரிசுத்தம் இவைகளின் கூட்டுத் தொகுப்பாக விளங்கிய மாபெரும் வீரன் என காலங்கள் சாட்சி சொல்லும் இந்த **நெகேமியா,** ஒரு


**ஆசாரியனும் தலைவனும் இருதயத்தில் இணைந்து விட்டால் “சிறந்து” என்ற வார்த்தையின் அஸ்திபாரம் அங்கே போடப் படுகிறது என்று அர்த்தம்.**

அற்புதமானதேவமனிதன். கிறிஸ்தவர்கள் கவனித்துப் பார்க்க வேண்டிய ஒரு கலங்கரை விளக்கம். விசுவாசிகளும் ஊழியர்களும் உற்று நோக்கக் கூடிய ஒரு ஒளிவிளக்கு. பெருந்தலைவர்கள் கண்டு ரசிக்கக் கூடிய ஒரு மலைப்பட்டிணம். புதிய ஏற்பாட்டில் யாக்கோபு கிரியையோடு கூடிய விசுவாசத்தைப் போதித்தார்.பழைய ஏற்பாட்டில் கிரியையோடு கூடிய விசுவாசத்தால் நெகேமியா சாதித்தான். இவன் பழைய ஏற்பாட்டின் யாக்கோபு. ஆசாரியனாகிய ஆரோனும்,தலைவனாகிய மோசேயும் இணைந்து அடிமைத்தனத்தில் இருந்த இஸ்ரவேலரை விடுதலையாக்கி மார்க்க ரீதியாக உயிரடையச் செய்தது போலவே, எழுபது ஆண்டுகள் அடிமைத்தனத்திலிருந்து திரும்பிய யூதர்களை ஆசாரியனாகிய எஸ்றாவும், தலைவனாகிய நெகேமியாவும் மக்களை மார்க்க ரீதியான உயிர் மீட்சிக்குள் நடத்தினார்கள் என்பது கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆசாரியனும் தலைவனும் இருதயத்தில் இணைந்து விட்டால் **“சிறந்து”** என்ற வார்த்தையின் அஸ்திபாரம் அங்கே போடப்படுகிறது என்று அர்த்தம். யார் ஆசாரியன்? யார் தலைவன்? போதகப் பிதாக்களும் தலைமைத்துவங்களுமே! இலக்குகளும் நோக்கங்களும் ஒருவருக்கொருவர் ஒன்றுபடும்போது அஸ்திபாரம் உறுதிப்படும். வேத புத்தகத்தில் எஸ்றா நெகேமியா புத்தகங்கள் அடுத்தடுத்து வருவது போலவே, யூத வரலாற்றிலும் இவர்கள் அடுத்தடுத்து கிரியைகளை நடப்பித்தார்கள். எஸ்றா ஆலய ஆராதனையில்அக்கறை காட்டினான். நெகேமியா அலங்கத்தைக் கட்ட அக்கரை காட்டினான்.எஸ்றாவால் ஆன்மீக விழிப்பு மக்களுக்கு ஏற்பட்டது. நெகேமியாவால் மார்க்க ரீதியான விழிப்புடன் அரசியல் விழிப்பும் சேர்ந்துமக்களுக்கு வந்தது.**சத்திய உபதேசத்தை தெளிவாய் எடுத்துரைப்பது மட்டுமல்ல, அது மற்றவர்களுக்கும் போய் சேரத்தக்கதான முயற்சிகளை எடுக்க வேண்டும்.** அன்று எஸ்றா ஆலய ஆராதனையில் அக்கறை செலுத்தினான் என்றால், இன்று போதகர்களாகிய நமக்கு ஆராதனையில் அக்கறை என்பது ஜனங்களுக்கு சத்திய வசனத்தை தெளிவுபடுத்துவதும், அதிலே அவர்களை தேறினவர்களாக மாற்றுவதுமே! போதகர்களாகிய நாம் ஜனக்கூட்டத்தை சேர்ப்பதில் வித்தகர்களாக இருந்துவிட்டால் அது சிறந்த ஆராதனையாக இருந்துவிட முடியாது. மாறாக ஜனங்கள் கிறிஸ்துவுக்குள் சாட்சியாக வாழ்கிற முறைமையிலேதான் போதகர்களின் ஆராதனை சிறப்பு இருக்கிறது. அதே நேரம் போதகர்களின் தலைமைத்துவங்கள் அதே ஆவியுடையவர்களாக காணப்படுவது சிறப்பாய் கட்டுவதின் அடையாளமாக இருக்கிறது.அநேக இடங்களில் ஊழியர்கள் மிகுந்த ஆத்தும பாரத்தோடும், தியாகத்தோடும் தேவ இராஜ்யத்தைக் கட்ட இரவு பகல் பாராமல் ஓடிக் கொண்டும், உழைத்துக் கொண்டும், கண்ணீரோடு திறப்பின் வாசலில் நிற்பவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்களுடைய தலைமையோ, கர்த்தருடைய பெயரைச் சொல்லிக் கொண்டே தங்கள் குடும்ப இராஜ்யத்தையும், தங்களுடைய தலைமுறைகள் தழைத்தோங்க தங்கள் சொந்த இராஜ்யத்தையும் கட்டுவதற்கு, உள்ளான மனுஷனிலே அர்ப்பணிக்கப்பட்டவர்களாக காணப்படுவார்கள்.

**போதகர்களாகிய நாம் ஜனக் கூட்டத்தை சேர்ப்பதில் வித்தகர்களாக இருந்துவிட்டால் அது சிறந்த ஆராதனை யாக இருந்துவிட முடியாது.மாறாக ஜனங்கள் கிறிஸ்துவுக்குள் சாட்சியாக வாழ்கிற முறைமை யிலேதான் போதகர்களின் ஆராதனை சிறப்பு இருக்கிறது.**

அலங்கத்தை கட்டும் தலைவன் நெகேமியா,மக்களை ஒன்று சேர்த்த அவர் களுக்குள் விழிப்புணர்வு ஏற்பட தன் முழு பிரயாசத்தையும் செலுத்தினான். தேவநகர மாகிய எருசலேம் காக்கப்பட வேண்டுமென்று அலங்கத்தை கட்டி முடிக்க, தன் அவயத் தையே ஒப்புக் கொடுத்தவனாய் காணப்பட் டான்.தேவசபையாகிய ஜனங்களை தேவராஜ் யத்திற்கு சொந்தமாக்கும் தேவதரிசனம் உடைய தலைவர்கள் தேசத்திற்கு தேவைப் படுகிறார்கள்.ஆசாரியனாகிய ஆரோனும் தலைவனாகிய மோசேயும் இணைந்து அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரை விடுதலையாக்கி மார்க்கரீதியாக உயிர டையச் செய்தார்கள். இப்படிப்பட்ட இணைப்பு வெளிப்பார்வைக்கு மட்டுமல்ல, இருதயங்களிலே காணப்படும்போது தேசத் தின் அலங்கம் சிறப்பாய் கட்டப்படும். நாமும் தேவனுடைய ஆலயமாய் கட்டப்படு வோம்.

# ஆலயத்தின் உத்திரவாதம்



**நெ**கேமியா பெர்சிய சாம்ராஜ்யத்திற்கு அரண்மனையிலே பானபாத்திரக்காரனா யிருந்தான். நித்தம் நித்தம் இராஜ சமூகத்தை தரிசிக்கும் சிலாக்கியம் பெற்றவர். தன் கருத்தை இராஜாவுக்கு சொல்லவும்,தான் விரும்பும் காரியத்தை இராஜாவினிடத்தில் சாதித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பை பெற்றவர். இத்தனை சிலாக்கியத்துக்குரிய வேலை நெகேமியா விற்கு கிடைத்தது முழுக்க முழுக்க தேவனுடைய ஏற்பாடு தான். யாக்கோபின் வீட்டாரை இரட்சிக்க யோசேப்பை தேவன் அரண்மனைக்கு அனுப்பிவைத்தார். இஸ்ரவேலரை இரட்சிக்க மோசேயை அரண்மனையில் வளர விட்டார்.யூதர்களுக்கு விடுதலை தரும்படி எஸ்தரை தேவன் அரண்மனைக்கு அனுப்பி வைத்தார். இதைப்போல எருசலே மின் அலங்கத்தை கட்டி எழுப்ப,ஜனங்களை தட்டி எழுப்ப நெகேமியா விற்கு அரண்மனை வாசத்தை தேவன் தந்தார்.தேவனுடைய ஜனங்கள் இங்கே கவனிக்க வேண்டிய ஒரு காரியம், தேவன் நமக்கு தரும் வேலை, வாழ்வு, சுகம், பட்டம்,

பதவி இவைகளைக் குறித்து சற்று யோசித்துப் பார்க்க வேண்டும் . நம்மைவிட அறிவு பெருத்தவர்கள், தகுதிபடைத்தவர்கள் எத்தனையோ பேர் முன்னணியில் இருக்க, நம்மை தேவன் இப்படி உயர்த்தியிருக்கிறா ரென்றால் அதற்கு காரணம், நாம் தேவஜனத்திற்கு உதவ, தேவ சபைக்கு உதவ,தேவசித்தம் நிறை வேற, தேவனுடைய ஆலயமாக மாற நமக்கு இந்த வாய்ப்புகளும் வசதிகளும் தேவனால் உருவாக்கப் பட்டுள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த வெளிப்பாடு நெகேமியா வுக்குள் இருந்தது. அரச தரிசனம், அரண்மனை சாப்பாடு இவைகளில் அவன் லயித்துப் போய்விடவில்லை. மாறாக எருச லேமின் அலங்கம் கட்டப்படாமல் இருக்கிற செய்தி கேட்டு ஜெபித்தான், அழுதான், தனக்கு கிடைத்த நல்ல பதவியின் மூலம் முயற்சித் தான்.தேவசித்தம் நிறைவேற தனது சுகபோக வாழ்வை ஒதுக்கி வைத்துவிட்டு களம் நோக்கிச் சென்றான். எழுப்புதல் தேசத்தில் தாமதிப்பதற்கு ஒரு காரணம் என்ன தெரியுமா? சபை சுகபோக வாழ்வை விரும்புவதாலே தான். அழிவைக் குறித்து செவி கொடுத்து கேட்போர் குறைவு. ஆத்துமாக்கள்அழிந்து கொண்டிருக்கிறதே என்ற புலம்பலைக் காட்டி லும், தங்களுடைய சுய புலம்பல்களின் சத்தம் தான் அதிகம். தங்களைக் குறித்தும், குடும்பங்களின் குறைவுகளைக் குறித்தும், தங்கள் எதிர்காலங்களைக் குறித்தும் உள்ள புலம்பல்களின் சத்தம்தான் இன்றைய கிறிஸ்த வர்களிலே அதிகமாய் கேட்கப்படுகிறது. இன்றைய அநேக ஊழியங்களும் அதையே தான் பண்ணிக் கொண்டிருக்கிறார்களே யொழிய, தேசத்தின் அழிவைக் குறித்தும், ஆத்துமாக்களின் நிலை குறித்தும் கவலைகள், பாரங்கள் குறைவு. தங்களையும், தங்கள் ஊழியங்களையும் பிரஸ்தாபப் படுத்துவதும், அதற்கு அழகு மேல் அழகு சேர்ப்பதுமே அநேகருக்கு பிரதானமாயிருக்கிறதை அதிகமாய் காணமுடிகிறதே! களங்கமில்லா நெகேமியா கட்டி முடிக்க வேண்டிய அலங்கத்திற்காக தன் அவயவங் களை அர்ப்பணிந்திருந்தான். ஒரு தனி மனிதனுக்குள் எழும்பும் பாரம் வேர் பற்றி அல்லது அனல் பற்றி மற்றவரையும் சேர்த்திழுத்து ஐம்பத்திரண்டே நாட்களில் கர்த்த ருக்கென்று சாதிக்க முடியும் என்பது சாதாரண காரியமல்லவே! இக்காலத்திலும் நெகேமியாவின் ஆவியுடையவர்கள் சபைகளுக் குள் இருக்கிறார்கள். அவர்களை சரியாக அடையாளம் கண்டு வெளியே கொண்டு வரத்தக்கதான அர்ப்பணிக்கப்பட்ட தலைவர் கள் மிகக் குறைவு. இன்றைய நாட்களில் பெருந்**தலை**கள் என்று சொல்லப்படுகிறவர் கள் பலவிதமான **வலை**களுக்குள் சிக்கிக் கிடப்பதைத்தான் அதிகமாக காணமுடிகிறது. இப்படிப்பட்ட **வலை** சபைகளுக்கு பெரிய **கவலை**யை உண்டாக்குவதாகத்தான் இருக்கி றது. ஆனால் அவர்களோ இதெல்லாம் எங்களுக்கு கைவந்த **கலை** என்ற தோரணை யிலே எந்த கவலையுமின்றி நடந்து கொண்டி ருப்பது ஆச்சரியத்தை அளிக்கிறது. எந்த அலங்கத்தை யார் கட்டுவது என்று ஒன்றும் விளங்கவில்லை.

**இக்காலத்தி லும் நெகேமியாவின் ஆவியுடையவர் கள் சபைகளுக் குள் இருக்கிறார் கள். அவர்களை சரியாக அடையாளம் கண்டு வெளியே கொண்டு வரத்தக்கதான, அர்ப்பணிக்கப் பட்ட தலைவர் கள் மிகக் குறைவு.**



# ஆலயத்தைக் குறித்த தவிப்பு



**எருசலேமே யார் உன்மேல் இரங்குவார்கள்? யார் உன்னிடத்திற்கு திரும்பி உன் சுக செய்தியை விசாரிப்பார்கள்?** (எரே 15:5). என்று தேவன் அங்கலாய்ப்பதை கவனித்துப் பாருங்கள். இயேசுவின் பிரதான சீஷர் பன்னிருவரில் ஒருவனாகிய தோமா நேரடியாக நமது தாயகத்துக்கு வந்து சுவிசேஷத்தை சொல்லியும், 20 நூற்றாண்டுகள் சுவிசேஷத்தை கண்ட, கேட்ட நமது நாடு கிறிஸ்துவுக்குள் இன்னும் கட்டப்பட வில்லையே ! இந்த பாரதம் இன்னும் மண்மேடாகவும் குப்பை மேடாகவும்தானே காட்சி தருகிறது...! இப்பிரபஞ்சத்தின் அதிபதி இடையில் கட்டியிருக்கும் சில கஜம் துணியைத் தவிர(இரட்சிப்பின் வஸ்திரம்)மற்ற எல்லாவற்றையும் மக்களிடமிருந்து உரிந்து விட்டான். நிர்வாணியாய், நிம்மதியற்றவர்களாய், நிற்கதியாய் அலையும் நமது மக்களின் சுக செய்தியை விசாரிக்க வேண்டியது யார்? அவர்களுக்காக பரிதபிக்க வேண்டியது யார்? நமக்குள்ளே கேள்விகளை எழுப்புவோம். நெகேமியா செல்வத்தின் உச்சியில் இருப்பதால் தாய் நாட்டை மறந்துவிட வில்லை. மாறாக தாய் நாட்டை குறித்த பாரம் அவனுக்குள் அதிகரித்துக் கொண்டே சென்றது. **நெகேமியாவைப்போல் வெளி நாடுகளில் நீங்கள் குடியேறியவர்களாக, வேலை செய்பவர்களாக இருக்கலாம். ஆகிலும் உங்கள் பிதாக்கள் கல்லறை இருக்கும் இந்தியாவிற்காக பாரப்பட வேண்டியதும், பிரயாசப்பட வேண்டியதும் உங்கள் மேல் விழுந்த கடமை என்பதை மறந்துவிட வேண்டாம்.** கிராமங்களை எண்ணிப் பாருங்கள். கிராமங்களில் இடிந்து கிடக்கும் அலங்கங்களை கட்டி எழுப்ப உங்கள் பிரயாசத்தின் சிறுபகுதியையாவது அனுப்பி கிராம ஊழியங்களைத் தாங்குங்கள். கிராமங்களை தத்தெடுங்கள். **அநீதியான உலகப்பொருளால் உங்களுக்கு சிநேகிதரை சம்பாதியுங்கள். நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே, உங்களை ஏற்றுக் கொள்ளுவாருண்டாகும்படி இதைச் செய்யுங்கள்** என்று மத்தேயு 16 : 9ல் கர்த்தர் உரைக்கிறார்.

தேவன் உங்களுக்கு தந்துள்ள அந்தஸ்து ஆஸ்தி இவைகள் எதற்கு தெரியுமா? உங்களுடைய தேவைகளுக்கு மட்டுமல்ல, தேவனுடைய திட்டங்கள் உங்கள் மூலமாக நிறைவேறவும்தான்.

**அந்த பரம தரிசனத்திற்கு கீழ்படியாதிருக்க எனக்கு மனதில்லை** என்று பவுல் சொன்ன வார்த்தையை கோடிட்டு காட்ட விரும்புகிறேன். தரிசனம் ஒரு மனிதனை உணர்வடையச் செய்கிறது உந்தித்தள்ளுகிறது. ஊழியம் செய்ய வைக்கிறது. உள்ளத்தில் உறுத்தல் தந்து உலகிற்காய் அழ வைக்கிறது. அதற்காய் உதவவும் எழும்பவும் வைக்கிறது. நெகேமியாவின் கரிசனம் உணர்வைத் தந்து தரிசனத்தை

உருவாக்கியது.அந்த தரிசனம் உள்ளத்தில் தவிப்பை,தாகத்தை,வேகத்தை,சோகத்தை அவனுக்குள் சிருஷ்டித்தது.அதன் விளைவு தான் அலங்கம் அற்புதமாய் எழும்பியது.

நெகேமியாவின் தவிப்புகளை சபை உற்று கவனிக்க வேண்டும். அவனுக்குள் இருந்த அங்கலாய்ப்புகள் அவனை கிரியை செய்ய வைத்தது. பொய், வதந்தி, அச்சுறுத் தல், யுத்தம் என எத்தனையோ எதிர் வந்த போதும் அவன் ஓடவில்லை,பயத்தில் ஆட வில்லை, மனிதரின் உதவியை நாட வில்லை. தனது பணியை மற்றவர் மேல் போட வில்லை.களம் நோக்கிச் சென்றான்– நின் றான்– வென்றான். எந்த மனிதனின் உள்ளம் காரியங்களைக் கண்டு தவிக்கிறதோ அவனையே கர்த்தர் தலைவன் ஆக்குகிறார் என்பதற்கு நெகேமியா ஒரு நல்ல சாட்சி. அலங்கத்தை குறித்த தவிப்பு மாத்திரமல்ல, ஆட்களின் நிலையைக் குறித்த தவிப்பும் அவனுக்குள் பொங்கிக் கொண்டே இருந்தது. அந்த தவிப்பு சிலவேளைகளில் கண்டிப்பாக வெளிப்பட்டது.நெகே 5 :6ல் யூதர்களுக் குள்ளே கடன் கொடுத்தல்,வாங்கல் நிமித்தம் ஏற்பட்ட கூக்குரலினால் அவன் மிகவும் கோபம் கொண்டான்.அதற்காக உடனே அடிதடியில் இறங்கிவிடவில்லை.தன் மனதில் ஆலோசனை பண்ணினான். பிரபுக்களை கடிந்து கொண்டான்.மகா சபையைக் கூட்டி காரியத்தை சரி செய்தான்.(நெகே 5 : 7).ஓய்வு நாளில் மக்கள் வேலை செய்தபோது அவன் தவித்தான்.துடித்தான்.அதனால் அச்செயலை தடுத்தான் (நெகே13:15) சத்திய வசனம் வெறும் பூசிமெழுகுவதற்கு மட்டுமல்ல, கண்டித்து பேசப்பட வேண்டிய இடத்திலே கண்டிப்பு. கண்டிப்பு கண்டிப்பாக இருக்க வேண்டும். சத்திய உபதேசத்தின் மேல் கட்டப்படுகிற சபைதான் நிலைத்திருக்கும். அப்படிப்பட்ட சபைகள்தான் தேசத்தின் அலங்கத்திற்காக அங்கலாய்க்கும். இவ்வுல கத்து ஆசீர்வாதங்களையே சொல்லி மழுப்பிக் கொண்டிருக்கும் சபைகளால், ஊழியங்களால் உள்ள கிறிஸ்தவமும் கெட்டுப் போகும்.



## ஆலயத்தின் அவசியம்

**பா**னபாத்திரக்காரனான இந்த நெகேமியா காரிய சமர்த்தனாக மாறியதற் கும், மண்ணோடு மண்ணாக தங்கள் உணர்வு களை மக்கவிட்ட மக்களை தட்டி எழுப்பி ஐம்பத்திரண்டே நாட்களில் அலங்கத்தை கட்டி எழுப்பியதற்கு, அவனது திறமையோ, வீரமோ,சாமர்த்தியமோ,அறிவோ அல்ல. மாறாக, அவனுக்குப் பின்னே இத்தனை யும் செய்து முடிக்க தேவனுடைய கரம் அவனுக்கு நன்மையாய் இருந்தது. ஏனெனில் இவன் தேவசமூகத்தில் ஜெபிக்கிறவன் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.**என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாய் இருக் கிறதை..அவர்களுக்கு அறிவித்தேன்** (நெகேமியா 2 :18). தேவனுடைய கரம் நெகேமியாவுடன் இருந்தபடியால் ராஜா வின் இருதயம் நெகேமியாவிற்காக நெகிழ்ந்தது. நீதி 21: 1– ல் **ராஜாவின் இருதயம் கர்த்தரின் கரத்தில் நீர்க்கால்கள் போலிருக்கிறது.அதை தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்** என்ற வசனம் நெகேமி யாவின் வாழ்க்கையில் நிறைவேறி யது.

ராஜ சமூகத்தில், துக்கமுகமாய் இருப்பது மிகப்பெரிய தண்டனைக்குரிய

காரியம்.ஆனால் நெகேமியா ராஜாவின் சமூகத்தில் துக்க முகமாய் இருந்தது தண்டனையை அல்ல,கருணையைபெற்றுத் தந்தது.காரணம்**அவனது துக்கம் லௌகீக துக்கமல்ல, மாறாக தேவனுக்கேற்ற துக்கமாயிருந்தது.** பிரியமானவர்களே, உங்கள் முகம் எப்போதும் மலர்ச்சியாகவும் மகிழ்ச்சியாகவும் இருத்தல் அவசியம். துக்கத்தால் உங்கள் முகம் தொய்ந்து சோர்ந்து இருக்குமானால் வரும் நல்ல காரியங்களை அது கெடுத்துப்போடும். அதேவேளையில் தேவனுக்கடுத்த காரியங் களில் நீங்கள் பாரப்பட்டு, உங்கள் முகம் துக்கமடையுமானால் அது நல்லது. அப்படிப் பட்ட துக்கம் மனிதர்களின் மத்தியிலும் மகேசனின் சமூகத்திலும் இரக்கத்தை நமக்கு பெற்றுத்ததரும். சபை ஆராதனையிலே மகிழ்ச்சியோடு காணப்பட வேண்டும். வீட்டுக் கவலை, சீட்டுக்கவலைகளை மனதில் வைத்துக்கொண்டு,கவலைப்பட்டுக் கொண்டி ருந்தால் சாத்தான் வேட்டு வைப்பான். ஆம், அது தேவனுக்கு பிரியமானதல்ல.

அடுத்ததாக,தேவனுடைய கரம் நெகேமியாவோடு மக்களை ஒன்றித்து செயல்பட அனைவரையும் ஒருமனப்படுத்தி யது. தேவனுடைய கரம் மக்களை ஒருமனப் படுத்துகிறது என்பதை 2 நாளா 30 :12ல் வாசிக்கிறோம்.அப்படியே,இடிபட்ட அலங்கத் தோடே தங்கள் இனமான உரிமைகளை புதைத்துப்போட்டுவிட்ட மக்களை தட்டி உசுப்பி எழுப்பி வேலை செய்ய வைக்க நெகேமியா எடுத்த முயற்சிகளை தேவனின் கரம் கைகூடி வரச் செய்தது. அதனால் **"அவர்கள் ஒருமனப்பட்டு அந்த நல்ல வேலைக்கு தங்கள் கைகளை திடப்படுத்தி னார்கள்"** (நெகே 2 : 18) குடும்பமோ, ஊழியமோ, சபையோ எதுவாக இருக்கட்டும், நமது நயமான வார்த்தைகளோ,நலமான திட்டங்களோ ஒட்டு மொத்த ஒருமனதை கொண்டு வராது.இப்படிப்பட்ட காரியங்கள் நிமித்தம் குழுக்கள் தோன்றி ஒற்றுமையைக் கெடுக்கும் புழுக்களாக மாறிவிடும்.**திட்டங்கள் தீட்டியே குடும்பங்களை கோட்டைவிட்டவர் களையும்,பிரசங்கம் பண்ணியே சபையில் பிரச்சனையை வளர்த்தவர்களும் அதிகம் உண்டு.**ஆம், ஒருமனம் என்பது தேவனுடைய கரத்தால் உண்டாகிறது. அதனால்தான் யாபேஸ் ஜெபிக்கும்போது **உமது கரம் என்னோடு இருக்கட்டும்** என்று ஜெபித்தான். இந்த இரகசியத்தை நெகேமியா அறிந்திருந்த படியால் அவன் முதலாவது ஜெபிக்க ஆரம்பித்தான். தேவனின் கரம் அவனோடு இருந்த மக்களை ஒருமனப்படுத்தியது. சபையில் பிரச்சனையா? முழங்காலை முடக்கு வோம். வாயை மூடுவோம்.இருதயத்தை திறப்போம்.அற்புதம் நடக்கும்.எதிரி எகிரி விடுவான்.சபையில் ஒருமனம் பெருகும். அதைவிடுத்து வீடு வீடாக போய் ஒவ்வொரு நபராய் சந்தித்து சந்தனம் பூசி, சாஷ்டாங் கமாய் பணிந்து கொண்டால் காரியம் அவ்வள வாய் வெற்றி பெறாது. ஒப்புரவாகவேண்டிய நிலை இருந்தால் அப்படிப்பட்டவர்களை தேடிப்போகலாம்.ஆனால் குழப்பவாதிகளை குளுமைப்படுத்த நாம் போகணும் என்ற அவசியம் இல்லை. **ஜெபமே ஜெயம்.** அந்த ஜெபமே எப்பக்கத்திலும் நெருக்கத்தில் இருந்த நெகேமியாவின் ஜனத்திற்காக யுத்தம் செய்தது..இன்றைய திருச்சபைகளில் தேவை குதிக்கிற மக்கள்அல்ல. குந்தியிருந்து ஜெபிக் கிற மக்களும்,ஊழியர்களுமே!

**ஆரம்ப கால ஜெபத்தையும் ஊழியத்தையும் சபையையும் தொடர்ந்து, அதுவே வெற்றியின் பாதை யிலே நடத்தும் என்று நாம் எண்ணிவிட முடியாது.**


ஆரம்ப கால ஜெபத்தை யும் ஊழியத்தையும் சபையை யும் தொடர்ந்து, அதுவே வெற்றியின் பாதையிலே நடத் தும் என்று நாம் எண்ணிவிட முடியாது. மோசே கன்மலை யிடம் இரண்டாம் விசை பேசுவ தற்கு பதிலாக அடித்துவிட்டான்.

காரணம் அவிசுவாசம் அல்ல. மிதமிஞ்சிய எண்ணமே! நான் ஏற்கனவே தண்ணீர் வர வைத்தவன், அதில் எனக்கு அனுபவம் உண்டு என்று எண்ணி அவன் சுயசித்தத்தையும் சொந்த அனுபவத்தையும் முன்நிறுத்தி தேவ சத்தத்தையும், சித்தத்தையும் பின் தள்ளிவிட்டான்.இன்று அநேக ஊ ழியங் களிலே மக்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். ஆனால் அந்த ஊழியங்கள் கொஞ்ச நாளிலே மறைந்து இல்லாமல் போவதற்கு காரணம், ஆரம்பத்தில் ஜெபத்தாலும் தேவ பெலனாலும் ஊழியம் செய்தவர்கள், நாளடைவில் தங்கள் பெலன், அனுபவம் இவைகளை முன் நிறுத்தி செயல் படுவதால் மோசேக்கு கிடைத்த தண்டனை இங்கேயும் வந்துவிடுகிறது. **ஜனங்களை பொறுத்தவரை பேசினாலும் அடித்தாலும் அவர்கள் தாகம் தீர்க்கும் தண்ணீரை குடித்தார்கள்.ஆனால் மோசே கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை இழந்தான்.** கவனியுங்கள். நாம் சரியாக செய்தாலும் தவறாக செய்தாலும் ஜனங்கள் பெற வேண்டிய நன்மைகளை தடை செய்யக் கூடாது என்கிற எண்ணத்தில் தேவன் தமது கிரியையை தொடர்ந்து செய்வதால் நாம் சரியான பாதையில்தான் நடந்து கொண்டிருக்கிறோம் என்று இறுமாப்படைந்து ஏமாந்து விடக்கூடாது. மிகச் சரியான நடத்துதல்களை ஜெபத்தில் தரித்து தேவனிடத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். ஜெபிக்காமலேயே வெற்றி போல் தேன்றுகிற காரியங்கள் வாழ்க்கையில், ஊழியங்களில் நடக்கிறது என்றால், ஏதோ ஒரு நில நடுக்கம் பின்னால் காத்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்வது நல்லது.

**மிகச் சரியான நடத்துதல்களை ஜெபத்தில் தரித்து தேவனிடத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். ஜெபிக்காமலேயே வெற்றிபோல் தேன்றுகிற காரியங்கள் வாழ்க்கையில், ஊழியங்களில் நடக்கிறது என்றால், ஏதோ ஒரு நிலநடுக்கம் பின்னால் காத்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்வது நல்லது.**

அதே மோசே ஆசரிப்பு கூடாரத்தின் கட்டுமானப் பணியிலே கர்த்தர் தனக்கு கற்பித்த படியெல்லாம் செய்தான் என்றும் (யாத் 40 :16) அந்தப்படியே வேலையை செய்து முடித்தான் (யாத் 40:33) என்றும் எழுதப்பட்டுள்ளது. ஆகவே நடந்தது என்ன? அப்போது ஒரு மேகம் ஆசரிப்பு கூடாரத்தை மூடினது. கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று (யாத் 40: 34) கவனியுங்கள்,**அற்புதம் நடக்கிற அனுபவம் வேறு, மகிமை இறங்குகிற அனுபவம் வேறு.** அற்புதம் என்பது அவர் அழைக்கிற எவரைக் கொண்டும் நடைபெறும். ஆனால் வார்த்தையின்படி நடக்கிறவர்களின் குடும்பங்களிலே, ஊழியங்களிலே மகிமை இறங்குகிறது. இன்றைய கிறிஸ்தவ உலகம் மகிமையெல்லாம் தேடிச்செல்லவில்லை. அற்புதம் எங்கே? அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என்று ஓடிக்கொண்டிருக்கிறது. ஆகவேதான் இன்று அற்புத ஊழியங்கள் பெருகிவிட்டது. அற்புதங்களை நடத்தும் ஆராதனை ராஜாக்களும் பெருகிவிட்டனர். நமக்குள் கிறிஸ்துவின் மகிமை வாசஞ் செய்தால் ஒவ்வொரு நிமிடமும் நம் வாழ்க்கையில் அற்புதம்தான். தேவ மகிமையை நாடுவோம்.தேவ மகிமைக்காக காத்திருப்போம். அதுவே வெற்றியுள்ள ஊழியம். அதுவே வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை.

**இதுவே**
கிறிஸ்தவ அனுபவம் .



# ஆலயமாய் மாறுவோம்



வரும்போது சோர்ந்துவிடாமல், விசுவாசப் பரீட்சை அங்குதான் துவங்குகிறது. அதில் நிலைத் தால் மாபெரும் உயர்வு உண்டு என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்னொரு காரியம் சமாரியா வளர வேண்டும், வலிமை அடைய வேண்டும் என்று சன்பல்லாத்து விரும்பி னான். அது தவறல்ல. ஆனால் பிரச்சனை எங்கு ஆரம்பிகிறது தெரியுமா?சமாரியா வளர்ந்து


அலங்கம் கட்டினதை விட அந்த நல்ல காரியம் நடைபெறாமல் நின்றுவிட வேண்டும் என்று எதிர்கொண்டு வந்த மிப்பெரிய எதிர்ப்பை தகர்த்து எறிந்த மாபெரும் சாதனை. அலங்கத்தை கட்டுவதற்கு மாத்திர மல்ல, எதிராளிகளின் மனக்கோட்டையை தகர்ப்ப தற்கும் நெகேமியாவின் மேல் ஒரு அபிஷேகம் இருந்தது என்பது குறிப்பிடத்தக் கது.திராட்சத் தோட்டத்தை கெடுக்கிற குழிநரிகளையும் சிறு நரிகளையும் நமக்குப் பிடியுங்கள் என்று சூலமித்தியாள் சொல்லு கிறபடி (உன் 2: 15) தேவனுடைய பணியை கெடுப்பதற்கு நரிகள் பலவழிகளில் தத்தம் பணிகளை செய்து வருகின்றன.இங்கே ஓரோனியனாகிய சன்பல்லாத், அம்மோனி யனாகிய தொபியா,அரபியனாகிய கேஷேம் ஆகிய மூவர் கூட்டணி,நெகேமியாவுக்கு எதிர் நிற்கிறது.ஆம்,ஒரு ஊழியத்தில் எதிர்ப்பு வராத வரையில்,அந்த ஊழியம் சரியான வளர்ச்சி அடையவில்லை அல்லது கனி கொடுக்க ஆரம்பிக்கவில்லை என்றுதான் அர்த்தம்.ஒரு ஊ ாயம் எப்போது பூவும் பி ஞ்சும் கொடுக்க ஆரம்பிக்கிறதோ அப்போதே அந்த ஊழியத்தைச் சுற்றி இப்படிப்பட்ட நரிகள் ஊளையிட ஆரம்பித்து விடும்.எதிர்ப்புகள், விபரீதங்கள், வித்தியாச மான விமர்சனங்கள், நிந்தைகள் ஊழியத்தில்

வாழ வேண்டும் என்று நினைத்த சன்பல் லாத்தும்,எருசலேம் மதில்கள் கட்டப்படாமல் அப்படியே இடிந்து கிடக்க வேண்டும் என்று நினைத்தான்.அதன் எதிரொலிதான் அவனது சதி நிறைந்த திட்டங்கள். உங்கள் ஊழியம்,உங்கள் குடும்பம் வளர வேண்டும் என்று விரும்புவது நல்லது. ஆனால் அடுத்த ஊழியம், அடுத்த சபை வளரக் கூடாது சீர் கெட்டுப்போக வேண்டும் என்பது மோவாபின் ஆவி, சன்பல்லாத்தின் ஆவி கிரியை செய்கிறறது என்று அர்த்தம். ஒன்றாக நடப்பார்கள், ஒன்றாகப் போவார் கள், ஒன்றாக சாப்பிடுவார்கள் ஆனால் சிந்தைக் குள் இப்படிப்பட்ட ஆவிகள் கிரியை செய்வதை நான் கண்டிருக்கிறேன். வரிசை யாக கை பிடித்துக்கொண்டு அல்லே... லூயாாா... சொன்னால் போதாது. சிந்தை யிலே தேவனுடைய ஆவி கிரியை செய்ய வேண்டும்.தலைவர்களெல்லாம் ஒரே மேடை யிலே வந்து கூடுவது நல்லது. சிந்தையிலே கூடி இருப்பது அதிலும் நல்லது .

இன்னொரு காரியத்தையும் நான் சொல்லி முடிக்க விரும்புகிறேன். சன்பல்லாத்து, கேஷேமும் ஆள் அனுப்பி ஓனோ பள்ளத்தாக்கு ஒன்றில் ஒருவரை யொருவர் கண்டு பேசுவோம் என்று நெகேமியாவுக்கு தூதுவிடுகிறார்கள்

(நெகே 6 : 2). சாத்தானின் மிகப்பெரிய தந்திரத்தை இங்கு பார்க்க முடிகிறது.எவ்வளவு தூரம் எதிர்க்க முடியுமோ அவ்வளவு தூரம் சாத்தான் நம்மை எதிர்ப்பான்.அதில் வெற்றி பெறவில்லை என்றால் முறையை மாற்றிக் கொள்வான். ‘ **பகையாளி குடியை உறவாடி கெடு**’ என்று பழமொழி ஒன்று உண்டு. அதன்படி அவன் பல்லை காட்டி, பாசத்தையும் கொட்டி நம்மிடம் பட்சமாய் பேசுவான். ஏமாந்து போய்விடக்கூடாது. பள்ளத்தாக் கிற்கு வா கண்டு பேசுவோம் என்று அழைத்தால் பேச்சை நம்பி போய்விடாதே. யானையை பிடிக்க,குழி பறித்து மேலே தழை பரப்பி வைத்த கதை நடந்து விடலாம்.மாட்டிக் கொள்ள வேண்டாம்.சில நபர்கள் செய்யும் சமரசம் நமக்கு அவசியம் இல்லை.இந்த மோவாபியன்கள், அம்மோனியன்களின் அன்பும் ஐக்கியமும் நமக்குத் தேவை யில்லை. தூக்கி எறியுங்கள்,அவர்கள் நன்மைக்காக அல்ல, தீமைக்காகவே சமரசம் செய்ய ஆள் அனுப்புகிறார்கள்.தேவனுடைய ஜனம்,தேவனுடைய ஊழியர் சத்தியத்தை கைக்கொள்ளுவதிலும் நெகேமியாவிற்கு இருந்த வைராக்கிய ஆவியை பெற்றிருத்தல் வேண்டும்.சர்வ சமய வழிபாடு, சபை பாகு பாடற்ற ஐக்கியம் என்ற கண்ணா மூச்சு விளை யாட்டில் பங்கேற்க கூடாது.சர்வ சமய வழிபாடு,கூட்டுப்பிராத்தனை போன்றவற்றில் ஒரு உயிருள்ள கிறிஸ்தவன் நிச்சயம் கலந்து கொள்ளக் கூடாது. மற்றவர்கள் இயேசுவே தேவன் என்று அங்கீ கரிக்கும் வேளையில், நீங்களும் அவர்களின் விக்கிரகங்களை கடவுள் என அங்கீகரிக்கும் நிலைக்கு தள்ளப்படுவீர்கள். இது சாத்தானின் மகா ஆழமான தந்திரம் அல்லவா! சபைகளின் ஐக்கியம் நல்லது.அதே நேரம் சபை பாகு பாடற்ற ஐக்கியம் என்பது

**சில நபர்கள் செய்யும் சமரசம் நமக்கு அவசியம் இல்லை.இந்த மோவாபியன்கள், அம்மோனியன்களின் அன்பும் ஐக்கியமும் நமக்குத் தேவை யில்லை. தூக்கி எறியுங்கள்,அவர்கள் நன்மைக்காக அல்ல, தீமைக்காகவே சமரசம் செய்ய ஆள் அனுப்புகிறார்கள்.**




சோதித்துப் பார்க்க வேண்டிய ஒன்று,இன்றும் விக்கிரகங்களை விடாத சபையையும் ,பரிசுத்த ஆவியை நம்பாத சபையையும், சத்தியத்தை தூஷித்து நடக்கிற சபை களையும் அங்கீகரித்து ஐக்கியப்பட்டால் அது பள்ளத்தாக்கில் தொபியா சன்பல்லாத்தோடு கண்டு பேசுவதற்கு சமம். வீழ்ந்து போதபடிக்கு விழிப்பாய் இருப்போம்.நெகேமியா வெளிப் பாடுள்ள தலைவன்.நாமும் நிகழ்காலத்தைக் குறித்தும், வருங்காலத்தைக் குறித்தும் சரியான வெளிப்பாட்டை பெற்றிருக்க வேண்டும். வெளிப்பாடு இல்லாவிட்டால் யூதாஸ்களை,தேமாக்களை,அப்சலோம்களை அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் இடறிப்போவோம்.

இப்படி அநேக காரியங்கள் இருக்கிறது.அருமையானவர்களே, எழுந்து கட்டுவது என்பது நல்லது. ஆனால் அதை எவ்வாறு கட்டு வது என்பதை கிறிஸ்தவ உலகம் அறிந்திருப்பது அதிலும் நல்லது.

**அலங்கம் ஒவ்வொரு கிறிஸ்த வனின்**
**அங்கமாக மாறட்டும்.**
**ஆதங்கம் பெருகட்டும்**
**தேவனுடைய ஆலயமாக மாறட்டும்.**

★

# சிந்தனைக்கு

- துச்சமாக எண்ணப்பட்ட சுள்ளிகள் பறவைக்கு கூடு
  எச்சமாக எண்ணப்பட்ட எளியோர் தேவனுடைய வீடு .
- குறைகளை சொல்லி புலம்புவதை விட
  நிறைகளை சொல்லி நிம்மதியாக இருப்போம்.
- 'குறை' என்ற அம்பு உன்னை நோக்கி வரும்போது
  'குரை'க்காமல் இருப்பவனே நிறைவுள்ளவன்.
- திகைப்பிற்கு பிறகு வரும் நம்பிக்கை ஆழமானது
  நம்பிக்கைக்கு பிறகு வரும் திகைப்பு ஆபத்தானது.
- போலியாக பேசும் அலங்கார வார்த்தைகளை விட
  பேசாமல் இருக்கும் மௌனம் அழகானது
- கவலைக்கு காவல் வைப்பவன் பலவீனன்
  கவலையை கடந்து போகிறவனே உண்மை பலவான்.

**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்**(1பேதுரு 5:7).

## திரு குரல்

1.செய்வினை செய்வார் பிறர் அழிய - அறியார்
அவ்வினையே தன்னை அழிக்கும் என்று.

2.பிறர் தவறை சுட்டிக் காட்டல் சிறந்ததே - அதிலும்
நம் தவறை பிறர் தட்டிக் கேட்டல் சாலச் சிறந்ததே .

3.தன்னை நிதானிப்பதில் காட்டுவர் நிதானம் - அவர் தாம்
மற்றவரை தீர்ப்பதில் அள்ளிக் கொட்டுவார் அவசரம் .

4.பாலோடு தேன் கலந்தது போல பாசம் காட்டுவார் பலர் - அவரின்
இக்கட்டிலோ இல்லாமல் போவர்.

## வானவெடி

**நீ போஜன பிரியனாயிருந்தால் உன் தொண்டையிலே கத்தியை வை** (நீதி23: 2) அதிகம் உண்பது என்பது உடல் சார்ந்த ஒரு பிரச்சனை என்பதை விட , அது ஒரு ஆன்மீகப் பிரச்சனையும் கூட . அளவுக்கு அதிகம் உண்பது என்பது ஒரு ஒழுங்கற்ற செயல் என்பது மட்டுமல்ல,அது ஒரு பாவம் என்பதை நாம் உணர வேண்டும். **அவர்களுடைய தேவன் வயிறு** (பிலி 3 : 19). உண்பதை இன்னொரு விக்கிரக கடவுள் என்று நாம் உறுதியாக உணரவில்லையென்றால், நம்முடைய வழியை அல்லது நாம் உண்ணும் அளவை நாம் மாற்றிக் கொள்ள மாட்டோம்.




# சகோதரிகள் பகுதி

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் வாழ்த்துதலை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இந்த மாத இதழில் வேதத்திலுள்ள **கனம் பொருந்திய ஸ்திரீ** யைக் குறித்து தியானிக்க ஆவியானவர் உதவிச்செய்வாராக.

2Ö«VÛV 4 : 8 - " **பின்பு ஒருநாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும் போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ அவனைப் போஜனம் பண்ண வருந்திக் கேட்டுக் கொண்டாள்; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிற போதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்** " ( வச 4 : 8 ).

பிரியமானவர்களே, வேதத்தில் இந்த ஸ்திரீயின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் வேதம் இவளை கனம் பொருந்திய ஸ்திரீ என்று மிகவும் கனப்படுத்துவதைப் பார்க்கிறோம். அருமையானவர்களே, நாம் ஒவ்வொருவரும் கனம்பொருந்திய வாழ்க்கை வாழவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். புசிப்போம்...குடிப்போம் ..நாளைக்கு மரிப்போம்.. என்றல்ல... உழைத்தேன்... சம்பாதித்தேன்.. என் சாமர்த்தியம்...என்பெலன் அறிவு என்று பெருமை பாராட்டி......என் ஞானம், என் கல்வி, என் பெலன் என்று நம்முடைய பெருமையை பேசி நாட்களை கடத்திப்போகிற சாதாரண வாழ்க்கைக்கு நாம் அழைக்கப்படவில்லை.

இங்கே இந்த ஸ்திரீ தன் வாழ்க்கையில்....அநேக குறைவுகளையும்....இல்லாமைகளையும் ..அநேக ஏற்ற இறக்கங்களையும் கடந்து வருகிற ஒரு ஸ்திரீயாகத்தான் பார்க்கிறோம்.2 இராஜா 4 : 14ல் வாசிக்கும்போது இவளுக்கு பிள்ளைகள் இல்லை..அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்று வாசிக்கிறோம்.இருந்தாலும் ஒரு கனமுள்ள வாழ்க்கை வாழ்ந்திருக்கிறாள்.எத்தனை குறைவுகள் தனக்கு இருந்தாலும்,தன் இல்லாமையிலும்..குறைவுகளிலும் **தேவன் மேல் ஒரு தாகம் - தேவனுடைய வீட்டில் மேல் ஒரு தாகம் - தேவனுடைய வார்த்தையின் மேல் ஒரு தாகம்** உள்ளவளாகவே இருந்தாள்.

அருமையானவர்களே, இன்றைக்கு நம்மில் எத்தனைபேருக்கு **இல்லை** என்பதே ஒரு பெரிய அங்கலாய்ப்பாக இருக்கிறது !!....நாள்தோறும் பெரிய புலம்பலாக இருக்கிறது. எனக்கு எதுவும் இல்லையே? எனக்கு கர்த்தர் என்ன கொடுத்தார்? நான் ஏன் அவரை தேட வேண்டும்? எனக்கு நல்ல வாழ்க்கை இல்லையே ... நல்ல புருஷன் இல்லையே... நல்ல வீடு இல்லையே..வேலை இல்லையே...பிள்ளைகள் இல்லையே...கர்த்தர் எனக்கு எதுவும் தரலியே ...நான் ஏன் அவரை தேடனும்? அவர் எனக்கு என்ன செய்தார்?? என்றெல்லாம் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

தேவனை தேடுவதில் ஒரு ஆவல்..வாஞ்சை .. (வருந்தி ) தன்னை வருத்திக் கொண்டு தேடுகிற ஒரு முயற்சி இருந்தது.தேவன் மேல் தாகம் கொண்ட ஒரு மனுஷனுக்கு மற்ற மனுஷரைக்குறித்த அறிவை..அதாவது எவர்களை விட்டு விலக வேண்டும்...எவர்களோடு ஐக்கியம் கொள்ள வேண்டும் என்ற பகுத்துணர்வை தேவன் நிச்சயமாய் கொடுப்பார்.அப்படியே இந்த ஸ்திரீயும் பயணப்பட்டு வருகிற தேவமனுஷனை பரிசுத்தவான் என்று கண்டு கொண்டாள். ஆனால் இந்த ஸ்திரீயோ தன்னுடைய இல்லாமையிலும்..குறைவுகளிலும் தேவன் மேல் உண்மையான தாகம் உடையவளாய் இருந்தாள் என்று பார்க்கிறோம். வசனம் - 9 ல் அவள் சொல்வதை அவள் புருஷன் நம்பி ஏற்றுக்கொள்கிறான்.

அருமையானவர்களே,நீதிமொழிகள் 31:11 சொல்லுகிறது...(குணசாலியான ஸ்திரீ ) **அவள்**

**புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்**.இந்த ஸ்திரீயினுடைய நற்குணம்... நற்சாட்சியினிமித்தம் வேதம் இவளை **கனம் பொருந்திய ஸ்திரீ** என்று கனப்படுத்துவதை பார்க்கிறோம்.கனம் பொருந்திய புருஷனாக, கனம் பொருந்திய ஸ்திரீயாக வாழ வேண்டுமென்றால்..அவன் அல்லது அவள் தேவனை தேடுவதில் வாஞ்சையும் தாகமும் உள்ளவளாக காணப்பட வேண்டும்.தேவனை கனம் பண்ணுவதில் முந்திக்கொள்ள வேண்டும்.வேதம் சொல்லுகிறது **என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுகிறேன் என்னை கனவீனம் பண்ணுகிறவர்கள் கனவீனம் பண்ணப்படுவார்கள்** என்று வாசிக்கிறோம். நாமும் எந்த நிலையிலும் தேவனை உண்மையாய் தேடுகிறவர்களாய், நற்குணசாலிகளாய் மாறுவோம்.

## தேவனுடைய வீட்டில் மேல் ஒரு தாகம்

2இராஜா 4 : 23ல் வாசிக்கும்போது **தன் புருஷனிடத்தில் ஆள் அனுப்பி; நான் சீக்கிரமாய் தேவனுடைய மனுஷன் இருக்கும் இடமட்டும் போய்வரும்படிக்கு வேலைக்காரரில் ஒருவனையும் ஒரு கழுதையையும் எனக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லச் சொன்னாள்.**

**வசனம் - 23ல் அப்பொழுது அவன் : இது அமாவாசியும் அல்ல ஓய்வு நாளும் அல்லவே நீ இன்றைக்கு அவரிடத்துக்குப்போக வேண்டியது என்ன என்று கேட்கச் சொன்னான்.அதற்கு அவள் : எல்லாம் சரிதான், நான் போக வேண்டியிருக்கிறது என்று சொல்லியனுப்பி,**

அருமையானவர்களே,இந்த ஸ்திரீ சொல்கிறாள் தேவனுடைய மனுஷன் இருக்கும் இடம் மட்டும் போய் வருகிறேன் என்கிறாள்.**அதற்கு அவள் புருஷன்,இது அமாவாசியும் அல்ல ,ஓய்வுநாளும் அல்லவே... ஏன் போக வேண்டும்? .** ஆனால் ஓய்வு நாள் என்றால் தேவனுடைய வீட்டில் ஆராதனை நாள் என்பதை அவள் புருஷன் அறிந்திருந்தான். காரணம் அந்த ஸ்திரீ தேவனுடைய வீட்டைக் குறித்து வாஞ்சை உள்ளவளாக இருந்தாள். நாம் எப்படி? வாரத்தில் ஒரு நாள் அது நமக்கு கடமையாக போய்விடுகிறது. ஒரு சின்ன பலவீனம்...சுகவீனம் வந்தாலே ஆராதனையை தவிர்க்கிற...சாக்கு போக்கு சொல்கிற அநேகர் நம் மத்தியில் உண்டு.உலகத்தாருக்கு அன்றைக்குத்தான் ***Holiday.*** நமக்கோ அது ***Holy day*.** புரிந்து கொள்வோம். சபை கூடுகைக்கு... சபை ஐக்கியத்திற்கு .. நம் குடும்பத்திலும் அநேக கேள்விகள் வரும்.தடைகள் வரும்.வாரத்தில் ஒரு நாள் போதாதா? எல்லா சபைகூடுகைக்கும் போய் ஆகணுமா? ஆராதனைக்கு போயாயிற்றே? ஊழியத்திற்கும் போகணுமா? பிள்ளைகளின் படிப்பு... வேலை களைப்பு... விருந்தினர் உபசரிப்பு.. வீட்டின் பொறுப்பு..கடமைகள்...இப்படி ஆயிரம் ஆயிரம் தடைகள் நமக்கு முன்பாக நிற்கும்.

அருமையானவர்களே,நாம் தேவனுக்கு கொடுக்கும் நேரம் என்பது அதாவது சபை ஆராதனை,சபை கூடுகை,வார்த்தையின் மேலுள்ள வாஞ்சை இவையெல்லாம் நம் வாழ்க்கையின் ஒரு பகுதி அல்ல.இவைகள்தான் நம் வாழ்க்கையாக இருக்க வேண்டும்.மேற்சொன்ன அத்தனை கடமைகளும் பொறுப்புகளும் அன்றாட வாழ்க்கையின் காரியங்களெல்லாம் அவசியமே..**எல்லாம் சரிதான்...**எல்லாம் தேவைதான்...ஆனாலும் **வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார்** என்ற பவுல் சொல்கிறதுபோல **கிறிஸ்து எனக்கு ஜீவன்** என்று சொல்லி நம் ஜீவியத்தை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுப்போம்.சபை கூடுகையை சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டு விடாதபடி, தேவனுடைய வீட்டைக் குறித்த பக்தி வைராக்கியம் நம்மையும் பட்சிக்கட்டும்.சபை ஐக்கியத்தில் நிலைத்திருந்து கிறிஸ்துவுக்குள் வளருவோம்.தொடர்ந்து **தேவனுடைய வார்த்தையின் மேலுள்ள தாகத்தை** குறித்து அடுத்துள்ள பகுதியில் தியானிப்போம். **கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.** ✦

( தொடரும் )

சகோதரி : **லீமா போஸ்கோ**

# மணிப்பூரா... மரணப்போரா...

சகோதரனே..
சுதந்திரம் பெற்ற
பாரதப் பூமியில்
மணிப்பூர் மட்டும்
சதி வலையில் சிக்கியதென்ன...?
சூழ்ச்சிக்கு அடிமைப் பட்டதென்ன?

வன் கொடுமையும்
பெண் கொடுமையும்
கண்முன்னே
கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறதே...
கலைகளின் பூமி
கலவர பூமியானது எப்படி ?

இனவெறியும் மதவெறியும்
கொலைவெறி நடத்துமானால்
மனித நேயம்
மரித்து போய் விட்டதா ?

கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தம் செய்த மண்ணில்
குரல்வளை அறுத்து
இரத்தம் சிந்துவதுதான்
அகிம்சை வாதமா?

நன்முறையில் கிடைத்த விடுதலை
வன்முறை கும்பலுக்கு
இரையாயிருக்கிறதே...

இடஒதுக்கீடு பிரச்சினையில்
இனத்தை அழிப்பதால்
சுடுகாடு அல்லவா
ஒதுக்கீடு செய்ய நேரிடும்

மதவாதத்தின் கொரூர கரங்கள்
மதக்கோட்டையைப் பிடிக்க
வேட்டையாடுமென்றால்
நாட்டை மீட்பது யார்?

பழங்குடிகள்தானே...
ஆற்று நாகரிகத்தின்
ஆரம்பப் புள்ளி
அவர்களின்
தெப்புள் கொடி உறவுக்கா
அமிலம் ஊற்றி
முற்றுப் புள்ளி வைப்பது ?

நெருப்பை கண்டுபிடித்தவனையே
தீப்பிழம்புக்கு
தின்னக் கொடுப்பதா..?






உயிரையும் உடமைகளையும்
கொளுத்திவிட்டு
சவக்குழியில்
சமாதான ரோஜா வளர்ப்பாயோ..?

கிறிஸ்தவனே,
உனது சகோதரன்
நெருப்பில் வேகும்போது -நீ
குளிர்பதனத்தில்
ஜெபித்துக்கொண்டே
இருப்பாயோ...?

பெந்தெகொஸ்தே பெருமன்றங்கள்
பெயருக்குத்தான்
இருக்கின்றனவா...?

ஊருக்குள்ளே கூட்டம் போட்டு
ஆளுக்கொரு பதவி சுமந்து
கூடுக்குள்ளே பதுங்கும்
நத்தைபோல் இருக்கிறாயா..?

நாளை - தமிழ்நாட்டுக்கு
உன் வீட்டுக்கு
இந்த நிலை வராதென்று
நினைக்கிறாயோ ?

சகோதரனே
சமாதானத்துக்கு
குந்தகம் விளைவிக்கும்
தீவினை சக்திகளை
முறியடிக்க
கிதியோனைப்போல் புறப்படு

ஒற்றைச் சக்கரத்தால்
ஒன்றும் உருட்ட முடியாது
ஒற்றுமை நெம்புகோலால்
உலகத்தையே புரட்டலாம்

பாரத மண்ணில்
கிறிஸ்தவனுக் கெதிராய்
கண்ணிவெடி புதைக்கும்
விஷ ம (த)வாதிகளை
வேரறுக்க புறப்படுவதில்
வீறுகொண்டு எழும்பு ...!

அல்பா என். ஆசைத்தம்பி
Cell : 9841166883.(ஆவடி).




## கவனியுங்கள்

கடந்த மாதம் 28 பேர் எழுதியதில் 27 பேர் சரியான பதிலை கொடுத்திருக்கிறார்கள்.நல்லது. தொடர்ந்து மற்றவர்களுக்கும் இந்தப் பகுதியை அறிமுகம் செய்து, வேதத்தை வாசிக்க ஊக்குவியுங்கள்.

## வேத பகுதி

**எண்ணாகமம் : 31 முதல் 35 வரை**

1.சேனாபதிகள் மோசேயிடத்தில் காணிக்கையாக கொண்டு வந்த பொன் எத்தனை சேக்கல்?

2.கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினவர்கள் யார்?

3.மீதியானியருக்கு எதிரான யுத்தத்தில் கோத்திரத்திற்கு எத்தனை பேர் பிரித்தெடுக்கப்பட் டார்கள்?

4.ஆரோன் மரிக்கும் போது வயது என்ன?

5.சாப்பேர் மலையிலிருந்து புறப்பட்டுப் போய் எங்கு பாளையமிறங்கினார்கள் ?

6.கானான் தேசத்தை பங்கிட்டு கொடுக்கும் நப்தலி கோத்திரத்தான் யார் ?

7.லேவியருக்கு கொடுக்க வேண்டிய மொத்த பட்டணங்களின் எண்ணிக்கை என்ன?

8.எப்புன்னேயின் குமாரன் யார் ?

9.கர்த்தரின் சபையில் வாதை நேரிடக் காரணமான தீர்க்கதரிசி யார்?

10. மனாசேயின் குமாரன் கட்டுவித்த கிராமங்களுக்கு என்ன பெயரிட்டான்?

## கடந்த மாதம் சரியான பதில் எழுதியவர்கள்

1.செல்வம் ஜெயராஜ் (பிலாய்).
2.மஹா (வேப்பம்பட்டு).
3.ஹரினி ரூபநாதன் (வெள்ளானூர் )
4.பூஜா ரூபநாதன் (வெள்ளானூர்).
5.அசோக் நீதிமொழி (திருவள்ளூர்).
6.ஆலீஸ் அருள்மணி (கோட்டையூர்).
7.ரோஸி வினோத் (காமராஜ் நகர்).
8.ரெஜினா பாண்டியன் (அம்பத்தூர்).
9.ரம்யா லிவிங்ஸ்டன் (போரூர்).
10.இவான்ஜலின் (காட்பாடி) .
11.லீலா ஜெயபால் (காமராஜ் நகர்).
12.டாலி தாமஸ் (வெள்ளானூர்)
13.சோபியா பிராங்ளின் (வெள்ளானூர்).
14.கிரேஸி (வெள்ளானூர் ).
15.ஜென்ஸி பூஜா (வெள்ளானூர்).
16.டாரீஸ் பிலோமினா (செங்குன்றம்).
17.எலிசபெத் சாலொமோன் (கன்னிகாபுரம்).
18.ஜான்சி ராணி (தென்காசி).
19.Dr.இவான்ஜலின் ஜோன்ஸ் (சேலம்).
20.எட்வினா (கோயில் பதாகை).
21.பிரீத்தி (வெள்ளானூர் ).
22.பவானி (வெள்ளானூர்).
23.ரீனா சங்கீத் (வெள்ளானூர்).
24.பிரியா ஜான்சன் (வெள்ளானூர்).
25.ராகேல் ஜீவிதா (வெள்ளானூர்).
26.மர்வின் (வெள்ளானூர்).
27.மதுமிதா (வெள்ளானூர்).

**பரிசு பெற்றவர் : எட்வினா**

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 27 - 8 - 2023.**